# சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 50வது கூட்டறிக்கை 2022.04.19

சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 50வது அமர்வு 2022.04.19 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பிற்பகல் 4.15 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

**சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 01. ஜனாப்.ஏ.எம்.எம்.நௌசாட் | கௌரவ தவிசாளர் | அ.இ.ம.கா |
| 02. ஜனாப்.ஏ.அச்சி முஹம்மட் | கௌரவ உப தவிசாளர் | ஸ்ரீ.சு.க |
| 03. ஜனாப்.ஐ.எல்.நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 04. ஜனாப்.எஸ்.எம்.எம்.முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 05. ஜனாப்.யூ.எல்.அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 06. திருமதி.ஆர்.வளர்மதி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 07. திரு.என்.கோவிந்த சாமி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 08. ஜனாப்.ஏ.சி.முஹம்மட் சஹீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 09. ஜனாப்.ஐ.எல்.எம்.மாஹிர் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 10. ஜனாப்.எம்.ரீ.பௌசுள்ளாஹ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 11. ஜனாப்.ஏ.எம்.எம்.றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 12. ஜனாப்.ஏ.எல்.எம்.ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 13. ஜனாப்.எஸ்.நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 14. ஜனாப்.ஏ.யூசுப் லெவ்வை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 15. திருமதி.கே.எம்.இன்பவதி | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 16. திருமதி.எம்.எஸ்.சரீபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 17. திருமதி.எஸ்.எம்.சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 18. திருமதி.கே.எல்.சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 19. திருமதி.கே.குலமணி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

**சமூகமளித்த உத்தியோகத்தர்கள்**

| | |
|---|---|
| 01. ஜனாப்.எம்.ஏ.கே.முஹம்மட் | செயலாளர் |
| 02. திருமதி.ஏ.பீ.ஏ.ஸஹானா | அலுவலக உதவியாளர் |

**கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்கள்:**

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகழும் இறைவனுக்கே, எல்லோரையும் 04வது சபையின் 50வது அமர்வுக்கு வரவேற்றவனாக,

இவ் அமர்வின் முதல் அம்சமாக சென்ற மாத கூட்டறிக்கை சமர்ப்பித்தலும் அங்கீகாரம் பெறலும். திருத்தங்கள் இருந்தால் கூறலாம். இல்லாவிட்டால் ஒருவர் ஆமோதிக்கலாம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம்.றியாஸ் |

கூட்டறிக்கை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

கௌரவ உறுப்பினர்களே, இன்று நாட்டில் நிலவும் அசாத்தியமான சூழலில் நமது சபை நடவடிக்கைகளை எப்படி கொண்டு செல்வது என்பது ஒரு பெரிய சவாலாக மாறியுள்ளது. இந்த வருடத்தில் முதல் 03 மாதங்களில் நாம் எதிர்பார்த்த வருமானத்தில் 10% மான வருமானத்தை அடைந்திருக்கின்றோம். வரி அடிப்படையில் 40% மான வருமானத்தை எடுத்திருக்கின்றோம். வாடகை 12%, Licence Fee 41%. இதற்கு நமது செயலாளர் நேரடியாக ஈடுபட்டு ஊழியர்களை பின்தொடர்வதால் இந்த வருமானத்தை ஈட்டக்கூடியதாக இருக்கின்றது. 03 மாதங்களில் சபை

வருமானமாக 09 மில்லியன் பெற்றிருக்கின்றோம். அதில் 7.4 மில்லியன் செலவளிக்கப்பட்டிருக்கின்றது. தற்போது நமது செலவுகளில் பாரிய செலவு எரிபொருள் செலவு. இந்த 03 மாதங்களில் 25% மான ஒதுக்கீட்டை பாவித்து விட்டோம். எஞ்சி இருக்கும் 75% இல் நமது ஒதுக்கீட்டை விட 03 மடங்கு விலை அதிகரிப்பு நடந்திருக்கின்றது. அதனால் நமக்கு எரிபொருள் மட்டுமல்ல Stationery போன்ற எல்லா செலவீனங்களும் 50% இல் இருந்து 75% இற்கு அதிகரித்திருக்கின்றது. இதனால் இவ்வளவு காலமும் கட்டுப்பாடாக நாம் நடாத்தி வந்த சபையை சபை கலைக்கப்படும் வரைக்கும் கொண்டு போவது உங்கள் கையில் உள்ளது. உங்கள் ஒத்துழைப்பு இல்லாமல் அதை செய்யமுடியாது. தேசிய அரசியலில் என்ன நடந்தாலும் நமது உள்ளூர் நிர்வாகம் ஒழுங்காக நடக்க வேண்டும் என்றால் சபையின் செலவீனங்கள் குறைக்கப்பட வேண்டும். இந்த சபையின் நடவடிக்கைகளை கொண்டு போவதில் நீங்கள் எல்லோரும் எப்போதும் ஒத்துழைத்தவாறு எஞ்சி இருக்கும் காலப்பகுதியிலும் உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

### தீர்மானம் - 04/50/01

தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக ஏற்படும் சிரமத்தினை கருத்திற் கொண்டு கௌரவ உறுப்பினர்கள், ஊழியர்கள், உத்தியோகத்தர்களுக்கு சபை நிதியிலிருந்து பெற்றோல் பெற்று, விநியோகித்துவிட்டு அவர்களிடமிருந்து குறித்த பணத்தினை அறவீடு செய்து பிரயாண வசதியினை மேற்கொள்வதற்கு வசதியளிப்பதற்கும், இதனை கௌரவ உறுப்பினர் பௌசுள்ளாஹ், கௌரவ உறுப்பினர் றியாஸ் அவர்களின் மேற்பார்வையில் செய்வதற்குமான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

### தீர்மானம் - 04/50/02

2022ம் ஆண்டுக்குரிய சீருடை வழங்கத் தகுதியான ஊழியர்களுக்கு சீருடை வழங்கல், சித்திரை மற்றும் றமழான் பண்டிகைகளுக்காக விழா முற்பணம் வழங்கத் தகுதியானோருக்கு விழா முற்பணம் வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

### தீர்மானம் - 04/50/03

சபையின் பராமரிப்பின் கீழ் உள்ள அனைத்து காணிகளுக்கும் Vesting Order பெறுவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.குலமணி |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

CTB இன் நிலுவையாக உள்ள வாடகை மொத்தமாக ரூபா 151,462.50 தர வேண்டும். அதில் ரூபா 25000.00 இனை தந்து விட்டார்கள். மீதியை தவணை முறையில் செலுத்துவதற்கு அனுமதி கேட்டிருக்கின்றார்கள்.

**தீர்மானம் - 04/50/04**

CTB இன் வாடகை நிலுவையாக உள்ள ரூபா 126,462.50 பணத்தை ஐந்து தவணை முறையில் செலுத்துவதற்கு அனுமதி வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல்.சிஹாமா |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

கௌரவ உறுப்பினர் நஜீம் அவர்கள் சென்ற சபையில் போதை பாவனை தொடர்பாகவும், அதற்கு அடிமையானோருக்கு புணர்வாழ்வு அளிப்பது தொடர்பிலும் கதைத்திருந்தார். நான் முழு Act எல்லாவற்றையும் எடுத்து அமைச்சில் இருந்து கீழ் மட்டம் வரைக்கும் எல்லோரிடமும் கதைத்தவுடன் அது ஒரு சாதாரண விடயம் அல்ல. கட்டடம் கட்டி வைத்தியர்கள், தாதிகள் போன்ற வசதிகள் நமக்கு இல்லை. நம்பிக்கையாளர் சபைக்கும், பிரதேச செயலாளருக்கும் எழுதி இருக்கின்றோம். ஒருவரும் மறுமொழி தரவில்லை. நமக்கு செய்யக்கூடிய சாத்தியம் இல்லை.

அடுத்ததாக காவலாளிகள் ஆளணி குறைந்து கொண்டு செல்கின்றது. நமது ஊழியர்களும் ஓய்வு பெற்றுச் சென்றுள்ளார்கள். அவர்களுக்கு பதிலாக நமக்கு ஆளணி எடுக்கின்ற முயற்சி கைகூடவில்லை. உதாரணத்திற்கு சென்னல் கிராமம் வாசிப்பு நிலையம், சிறுவர் பூங்காக்கள் போன்ற இடங்களுக்கு அப் பகுதியில் இருக்கும் சனசமூக நிலையங்களுடன் ஒப்பந்தம் செய்து சபை மாதாந்தம் பராமரிப்பு செலவை செலுத்தினால் சனசமூக நிலையம் மூலம் ஒருவரை பொறுப்பை கொடுத்து நடைமுறைப்படுத்தலாம். நிரந்தரமான காவலாளி ஆளணி குறைந்தவுடன் தற்காலிக காவலாளிகளை நியமிக்க வேண்டும். அவ்வாறு செய்தால் குப்பைகள் எடுப்பதற்கும், வடிகான் துப்பரவு செய்வதற்கும் ஊழியர்கள் இல்லை. அந்த தேவையை வேறு முறையில் நிவர்த்தி செய்தால்தான் அதை தடுக்கலாம்.

உதாரணத்திற்கு சென்னல்கிராமம் வாசிப்பு நிலையத்திற்கு சனசமூக நிலையத்தால் ஒருவர் வைத்து பராமரிக்கலாம். அதற்கு மாதாந்தம் அந்த செலவை கொடுத்தவுடன் அது சுயாதீனமாக இயங்கும். அதே போல் கைாட்டி சிறுவர் பூங்கா அதை சனசமூக நிலையத்திற்கு பாரம் கொடுத்தால் அதை பராமரிப்பது அவர்களின் பொறுப்பு. காவலாளி ஆளணியினை அரசாங்கம் படிப்படியாக குறைத்துக் கொண்டு செல்கின்றது. அதனால் இப்படி ஒரு முயற்சி எடுத்தால் என்ன? சனசமூக நிலையங்கள் அவர்களது Contract இற்கு மாத்திரம் Letter Head பாவித்து இருக்காமல் அவர்கள் இயங்கத் தொடங்கினால் நாமும் சனசமூக நிலையத்திற்கு மட்டும்தான் நேரடியாக உதவலாம்.

புளக் ஜே மேற்கு இற்கு இருக்கின்றது, சென்னல்கிராமத்திற்கு இருக்கின்றது. உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அவர்கள் அதிகமாக கவனிப்பது சமூக எழுச்சி. சமூகத்திற்கு சனசமூக நிலையத்தினால் எந்தவொரு பயனும் இல்லாவிட்டால் அது வளராது. நம்மிடம் இருக்கின்ற 03 சனசமூக நிலையத்திற்கு அந்த பலம் இருக்கின்றது. இப்படி ஆரம்பித்தால் சபையின் நேரடி சுமை குறையும். சென்னல் கிராம வாசிப்பு நிலையம் சனசமூக நிலையத்தின் பொறுப்பில் இருக்குமானால் சனசமூக நிலையம் பிரதேச சபையின் செயலகமாக மாறலாம். அப் பகுதியில் இருக்கின்ற மக்களின் முறைப்பாடுகள் எல்லாவற்றையும் சேர்த்து அந்த உத்தியோகத்தர் சபைக்கு வந்து கதைத்து அதற்கு பரிகாரம் தேடக்கூடியதாக வந்தால் மக்கள் சபைக்கு வருவதையும் குறைக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, கல்லரிச்சல் பிரதேசத்தில் பொதுவாக ஒன்றுதான் இருக்கின்றது. ஆனால் கல்லரிச்சல் 1,2,3 என்று 03 பிரிவு இருக்கின்றது. கல்லரிச்சல் 2ம், 3ம் பிரிவுக்கு இடையில் நீங்கள் சொல்லப்படுகின்ற சிறுவர் பூங்கா இருக்கின்றது. கல்லரிச்சல் 1 இல் இருக்கின்ற சனசமூக நிலையத்திற்கு பராமரிக்க கொடுத்தால் வட்டார ரீதியாக அது வேறொரு வட்டாரம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
வட்டாரம் வேறாக இருந்தாலும் சனசமூக நிலையம் என்பது அங்கத்தவரின் நிறுவனமாக இருக்க இயலாது. கல்லரிச்சல் 03 இல் இல்லாவிட்டால் 01இல் தான் இருக்கின்றது என்றால் அதை ஊக்குவிப்பதற்காக சபையின் சொத்து பராமரிக்கும் பொறுப்பை சனசமூக நிலையத்திற்கு மட்டும்தான் கொடுக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, ஒரு அங்கத்தவருக்கு கீழ் சனசமூக நிலையம் இருக்கும் போது இன்னொரு அங்கத்தவருக்கு அதை பராமரிக்கும் பொறுப்பை வழங்கும் போது பிரச்சினை ஏற்படும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அப்படியானால் நாம் ஏலத்தில் விடலாம். யாருடைய முன்மொழிவுகள் நன்றாக இருக்கின்றதோ அவர்களுக்கு கொடுக்கலாம். சனசமூக நிலையம் RDS மாதிரி Rubber Stamp ஆக இருக்கக் கூடாது என்பதுதான் அரசாங்கத்தின் கருத்து. உலக வங்கி, UNDP எல்லாம் சொல்வது என்னவென்றால் சபை நடவடிக்கைகளை சமூகத்திடம் சனசமூக நிலையம் மூலம் கொண்டு செல்லுங்கள். அவ்வாறு செய்கின்ற சபைகளுக்குதான் ஆதரவு தருகின்றார்கள். சர்ச்சை வரும். ஆனால் நாம் கொடுப்பது அரசியல் செய்வதற்கு இல்லை. அதை பராமரிப்பதற்கு. பிரதேச சபையின் பராமரிக்கும் பொறுப்பு சனசமூக நிலையத்திற்கு வருகின்ற போது UNDP போன்ற நிறுவனங்களிடம் இருந்து உதவிகள் எடுக்கலாம்.

**தீர்மானம் - 04/50/05**
எமது சபையில் காவலாளிகள் மற்றும் வேலைத் தொழிலாளிகள் பற்றாக்குறையாக இருப்பதனால் சனசமூக நிலையங்களுடன் ஒப்பந்தம் செய்து குறித்த சனசமூக நிலையங்களிடம் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு சேவைகளை வழங்குவதற்கும், அதற்கான பராமரிப்பு செலவை வழங்குவதற்குமான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.எம்.எம்.முஸ்தபா |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இந்த சபையில் தற்போது 19 பேர்தான் இருக்கின்றோம். கௌரவ உறுப்பினர் முஸம்மில் அவர்கள் இந்த சபையின் அங்கத்தவர் உரிமையில் இருந்து விடைபெற்றிருக்கின்றார் என்ற ஒரு வர்த்தமானி அறிவித்தல் வந்திருக்கின்றது. இதற்கு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மாற்று நியமனம் செய்யவில்லை.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் முஸம்மில் அவர்கள் இராஜினாமா செய்தாரா? அல்லது கட்சியினால் இடைநிறுத்தப்பட்டாரா?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சபையை பொருத்தவரையில் வர்த்தமானி அறிவித்தல்தான் அறிவித்தலே தவிர வேறு ஒன்றுமில்லை. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியால் இதுவரை இடைநிறுத்தி இருக்கின்றோம் என்று சபைக்கு எந்த அறிவித்தலும் இல்லை. ஒருவரை நியமிப்பது அல்லது பதவியில் இல்லை என்று அறிவிப்பது வர்த்தமானி அறிவித்தல்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மலையடிக்கிராமம் - 04ம் பிரிவில் விஷ வைத்தியர் வீதியையும், பௌஸ் மாவத்தை வீதியையும் தொடர்புபடுத்தும் பாதை திறப்பு சம்மந்தமாக மலையடி 4ம் பிரிவு குடியிருப்பாளர்கள் சேர்ந்து கையொப்பமிட்டு விஷ வைத்தியர் வீதியையும், பௌஸ் மாவத்தை வீதியையும் இணைக்கும் பாதையை திறந்து தருமாறு கேட்டு ஒரு முறைப்பாட்டை சென்ற 2021.03.25 ஆந் திகதி சம்மாந்துறை பிரதேச செயலாளருக்கும், சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளருக்கும் கையளித்தார்கள். அதற்கு எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படாததை இட்டு மலையடி 4ம் பிரிவு குடியிருப்பாளர்கள் சேர்ந்து கையொப்பமிட்ட அதே முறைப்பாடு எனக்கு அலுவலகத்தில் நேரடியாக வந்து 2021.08.03 ஆந் திகதி கையளித்தனர். அம் முறைப்பாட்டை சிபார்சு செய்து அவர்களிடமே சம்மாந்துறை பிரதேச செயலாளருக்கு அனுப்பி வைத்தேன். உரிய இடத்திற்கு நேரடியாகச் சென்றும் பார்வையிட்டேன். பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகள், குர்ஆன் மதரசாவுக்கு செல்லும் பிள்ளைகள் மற்றும் வயோதிபர்கள் சுற்றி வளைத்து சிரமத்திற்கு மத்தியில் கஸ்டப்பட்டு பிரயாணம் செய்கின்றார்கள் என்ற உண்மையான கள நிலவரத்தையும் அறிந்து கொண்டேன்.

2021.09.14 ஆந் திகதி நடைபெற்ற சம்மாந்துறை பிரதேச சபை கூட்டத்தில் விஷ வைத்தியர் வீதியையும், பௌஸ் மாவத்தை வீதியையும் இணைத்து பாதை மிக அவசியமாக திறக்கப்பட வேண்டும் என்று கூறினேன். இதனைத் தொடர்ந்து சபையால் இது விடயமாக உரிய இடத்திற்கு சென்று கள நிலவரத்தை அறிந்து அறிக்கை செய்யுமாறு கௌரவ உறுப்பினர் குழு ஒன்றை நியமித்து சென்ற 2021.09.23 ஆந் திகதி பி.ப 5.00 மணியளவில் ஸ்தலத்திற்கு சென்று பார்வையிட்டு கௌரவ உறுப்பினர் குழு அவ் இடத்தில் பாதை திறப்பது சாலச் சிறந்தது என அறிக்கை சமர்ப்பித்துள்ளனர். அப் பாதை திறப்பதில் சம்மாந்துறை பிரதேச சபைக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை என்பதுடன் இப் பாதையை திறப்பதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு சம்மாந்துறை பிரதேச செயலாளருக்கு 2021.10.14 இல் STR/PS/PLD/04 Com/2021 என்ற இலக்கமிட்ட கடிதத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டது.

மேலும் குறிப்பிட்டுள்ள பாதை திறக்கப்படுவதை துரிதப்படுத்துமாறு கோரி சம்மாந்துறை பிரதேச செயலாளருக்கு 2021.10.27 ஆந் திகதியிடப்பட்ட அஸ்வர் உதுமாலெவ்வை ஆகிய நான் எனது கடிதத்தை நேரடியாக கையளித்த சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட இடத்தில் உள்ள பேர்மிட் காரர்கள அனைவரையும் என்னையும் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யும் காணி உத்தியோகத்தர்களும் கட்டளையிட்டார். இதற்கினங்க சம்மாந்துறை பிரதேச செயலாளரின் பணிப்பின் கீழ் அமைக்கப்பட்ட உத்தியோகத்தர் குழு பார்வையிட்டு சென்றதன் பின்னர் எதுவித அனுமதியும் பெறாமல் தரிசு நிலமாக இருந்த காணித் துண்டுக்கு இரவோடு இரவாக கட்டிடத்திற்கான கட்டுமான வேலைகள் நடைபெற்றன. அவ்வமையம் பிரிவு கிராம சேவகர் உத்தியோகத்தர் உரிய இடத்திற்கு சென்று கட்டுமான வேலைகளை நிறுத்துமாறு கூறினார். அதை மறுத்தது மட்டுமல்லாமல் பொலிஸில் முறைப்பாடு செய்தார்கள். 2021.11.10 ஆந் திகதி சம்மாந்துறை பிரதேச செயலாளரை சந்தித்த போது நேரடியாக உரிய இடத்திற்கு சென்று கடமை ரீதியாக பாதைக்குரிய இடத்தை பார்த்து தீர்மானத்திற்குரிய திகதி ஒன்றை முடிவு செய்யுமாறும், இது பொலிஸாரிடமும் முறைப்பாடு ஒன்றை செய்திருந்தார். அவர்களுடன் சென்ற களத்தில் பாதை போடும் இடத்தை தீர்மானிப்போம் என காணி உத்தியோகத்தர்களிடம் கட்டளையிட்டனர்.

சம்மாந்துறை பிரதேச செயலாளரிடம் தொடர்பு கொண்டு பாதை திறக்க வேண்டியதை துரிதப்படுத்துமாறு கேட்டுக்கொண்டதற்கு பாதைக்கு இடையூராக இருக்கும் காணி உத்தரவுப்பத்திரகாரர் கே.எல்.எம். இப்றாஹீம் மௌலவி என்பவருக்கு கடிதம் அனுப்பி இருக்கின்றது அத்துடன் குறித்த இப்றாஹீம் மௌலவி என்பவர் சவூதி அரேபியாவில் ஜித்தா நகரில் இருக்கின்றார். 2022 பெப்ரவரி மாதம் வருவதாக என்னிடம் தொலைபேசியில் கதைத்துள்ளார். சரியென்று நானும் ஒத்துக்கொண்டுள்ளேன். மீண்டும் பெப்ரவரி மாதம் முடிந்து 2022.03.02 ஆம் திகதி சம்மாந்துறை பிரதேச செயலாளரிடம் கேட்ட போது இப்றாஹீம் மௌலவி என்பவருக்கு வழங்கப்பட்ட கால அவகாசம் முடிந்துவிட்டது. இனி நாம் அவரை எதிர்பார்ப்பதில்லை சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வோம். அதாவது 2022.03.15 ஆம் திகதி கள விஜயத்தை மேற்கொள்வோம் என்றார். குறித்த திகதியில் கள விஜயம் மேற்கொள்ளப்பட்ட பின்னர் 2022.03.30 ஆம் திகதி சம்மாந்துறை

பிரதேச செயலாளரின் தலமையில் ஒன்றுகூடி தீர்மானங்கள் எடுக்கப்பட்டு சம்மாந்துறை பிரதேச சபையின் கௌரவ தவிசாளர் அவர்களுக்கு 2022.04.07 ஆந் திகதி கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கடிதத்தில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் உத்தரவுப் பத்திரகாரர் கே.எல்.எம்.இப்றாஹீம் மௌலவி என்பவருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு மே மாதம் சவூதியிலிருந்து வருவதாக இக்கடிதத்தில் சுட்டிக்காட்டுகின்றார். ஆனால் இப்றாஹீம் மௌலவி ஏற்கனவே 2022 பெப்ரவரி மாதம் வர இருந்ததை ஏனோ சுட்டிக்காட்ட மறுத்துவிட்டாரோ அல்லது மறந்துவிட்டாரோ தெரியாது. கௌரவ தவிசாளர் அவர்களே சவூதி அரேபியாவில் ஜித்தா நகரில் குடும்பத்துடன் நீண்ட காலமாக சுகபோக வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்க மௌலவியான இப்றாஹீம் என்பவர் பெப்ரவரி மாதம் என்றும் மே மாதம் என்றும் ஏமாற்றிக்கொண்டு வருவதற்கு மக்கள் பிரதிநிதிகளாகிய நாம் இன்னும் இடமளிக்க முடியாது.

இதில் என்ன விடயம் என்றால் கௌரவ தவிசாளர் அவர்களே, பிரதேச செயலாளரிடம் இது சம்மந்தமாக கேட்ட போது 2021.10.25 ஆந் திகதி சொல்கின்றார் இப்றாஹீம் மௌலவி பெப்ரவரி மாதம் நாட்டுக்கு வருவதாக சொல்லி இருக்கின்றார். அதுவரைக்கும் காலதாமதம் கொடுப்போம். அதற்கு பின்னர் பாதையை திறப்போம் என்ற முடிவை சொன்னார். அதுவரைக்கும் மக்கள் பொறுமையாக காத்திருந்தார்கள். 2022.03.15ம் திகதி கள விஜயத்திற்கு சென்று அதில் 2022.03.31 ஆந் திகதிக்கு முன்னதாக இந்தப் பாதை திறப்பது என்ற தீர்மானத்தோடு எங்களது பிரதேச சபை செயலாளரும் அங்கு வருகை தந்திருந்தார். கடிதம் அனுப்பியதில் சுட்டிக்காட்டி இருப்பது என்னவென்றால் சட்டதிட்டங்கள் போல் பாதையை திறக்க வேண்டும் என்ற காரணங்களை காட்டி மௌலவி எதிர்வருகின்ற 5ம் மாதம் நாட்டுக்கு வருவதாக என்னிடம் தொலைபேசியில் பேசி இருக்கின்றார் என்ற விடயத்தை உங்களுக்கு குறிப்பாக காட்டி இருக்கின்றாார். நீங்கள் ஒரு தீர்மானம் எடுப்பதற்கு முதல் 5ம் மாதம் வரை கால நேரத்தை கொடுப்போம் என்ற முடிவு வரக்கூடும் என்பதற்காக சுட்டிக்காட்டி இருக்கின்றார் பிரதேச செயலாளர். ஆனால் அதே போல் பெப்ரவரி மாதம் வருவதாக தொலைபேசியில் பேசி ஏமாற்றம் செய்யப்பட்டிருக்கின்றது. இப்படி காலாகாலமாக ஏமாற்றுவதை விட எங்களது சபைக்கும் சபைக்குரிய சட்டதிட்டங்கள் இருக்கின்றது. உடனடியாக இதை பார்வையிட்டு நாங்கள் இந்தப் பாதையை திறப்பதற்கான தீர்மானத்தை எடுத்தே ஆக வேண்டும் என்று பணிவாக கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எம்.ரீ.பௌசுள்ளாஹ் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, இது சம்மந்தமாக நாங்கள் சென்று பார்த்தோம். இதில் என்ன பிரச்சினை என்றால் அவர் சொல்கின்ற பூமி Reservation வாய்க்கால் இருக்கின்றது. அதற்கு மௌலவி ஓரத்தால் எடுக்க சொல்கின்றார். கேட்டவர்கள் நடுவால் எடுக்க சொல்கின்றார்கள்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

காணிகள் எல்லாம் AM 265 படத்தின் படி வழங்கப்பட்டது. Original பேமிட் வழங்கப்பட்ட நேரம் பொதுப்பாதை ஒன்று இல்லை. அவ்விடத்தில் இருந்தது ஒரு வாய்க்கால். காலாகாலத்தில் வாய்க்காலை மூடி வளவோடு சேர்த்துவிட்டார்கள். அரசாங்க காணி உறுதியாகும் வரை முழுப் பொறுப்பும் பிரதேச செயலாளருக்கு இருக்கின்றது. அப் பாதைகள் உருவாக்கப்பட்டது அந்த வளவுகளை பிரிக்கின்ற நேரம் அவர்கள் ஒரு வளவுக்கு போகின்ற பாதை. அது பாதையாக எந்தவொரு பேமிட் இலும் எல்லையாக காட்டப்படவில்லை. அது நடைமுறைக்கு அவர்களின் தேவைக்காக பூர்த்தி செய்தது. அவர்களின் விருப்பத்தால் விடுபட்ட பாதைகளை நீடிப்பதற்கு பிரதேச செயலாளருக்கும் அதிகாரம் இல்லை. அவர்களின் சம்மதம் வேண்டும். நாம் சட்டரீதியாக கேட்கலாம் இருந்த ஆரப்பத்தை காணியை விடுவித்து பாரம் எடுங்கள் என்று, அதை எவரும் தடுக்க இயலாது. ஆனால் ஒரு தனியார் பாதையை நீடியுங்கள் என்று கேட்க இயலாது. இப்றாஹீம் மௌலவி இன்றைக்கு இருக்கின்ற நிலைக்கு அரச காணிக்கு உரித்தாகலாமா என்பது ஒரு கேள்வி. நமது பிரதேச சபை காலாகாலமாக பிரதேச செயலகத்திற்கு கூறி வருவது நீங்கள் பேமிட் காணிகளை பிரிப்பது என்றால் சபையின் Partition Plan அனுமதி எடுக்க வேண்டும் என்று கூறி வருகின்றோம்.

**கௌரவ உறுப்பினர எஸ்.எம்.எஸ்.முஸ்தபா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, தொடர்ச்சியாக ஒன்று இரண்டு இல்லை. விசேட குழுக்கள் அமைக்கப்பட்டு நானும் அதில் ஒரு உறுப்பினராக இருந்து இப்றாஹீம் மௌலவியினுடைய பாதை

பிரச்சினைக்கு செல்வதற்கு கிடைக்கவில்லை. பாதை திறப்பதற்கு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பாதையாக இருந்தால் எங்களுடைய சட்டத்திற்கு உட்பட்ட பாதையாக இருந்தால் பிரதேச சபை உத்தியோகத்தர்கள் சென்று திறக்கலாம். புதுப்பாதையை திறப்பதற்கு நாங்கள் ஏன் வலிந்து ஈடுபடுகின்றோம். கௌரவ உறுப்பினர் அஸ்பர் அவர்களின் விடயத்தில் இன்றைக்கு சபையில் கதைக்க வேண்டிய எவ்வளவோ விடயங்கள் இருந்து கொண்டிருக்கின்றது. சபையினுடைய அனுமதியை பெற்று உறுப்பினர் அவர்கள் இந்த விடயத்தை முன்வைத்து இருக்கின்றார்கள். கூடுதலாக நாம் பேச வேண்டிய எவ்வளவோ விடயங்கள் இருந்தும் கூட தொடர்ச்சியாக இப்ராஹீம் மௌலவியின் பாதையிலும், நளீம் அவர்களின் பாதையிலும் மிக நீண்ட பிரேரணைகள் எடுக்கப்பட்டிருக்கின்றது. என்னைப் பொருத்தவரைக்கும் சபை நடவடிக்கைகளுக்குள் வலிந்து கொண்டு வருகின்ற விடயமாக இருக்கின்றது.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நாங்கள் எல்லோரும் மக்கள் பிரதிநிதிகள். காலத்துக்கு காலம் ஒவ்வொரு பிரச்சினைகள் வருகின்றது. ஆரம்பத்திலே வர்த்தாமனி செய்யப்பட்ட பாதைகள் மட்டும்தான் நிர்ணயிக்கப்பட்ட பாதை என்று இல்லை. எங்களுக்கு தேவை என்று வருகின்ற நேரத்தில் அதை நியாயமா நியாயம் இல்லையா என்று பார்த்து செய்து கொடுப்பதில் பிரச்சினை இல்லை.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
தனியார் பாதையை பொதுப் பாதையாக மாற்றுவதற்கு அது அரச காணியாக இருக்கும் வரை நமக்கு அதிகாரம் இல்லை. இந்தக் கடிதம் 2022.04.18 ஆந் திகதி தான் சம்மாந்துறை பிரதேச சபைக்கு வந்து சேர்ந்திருக்கின்றது. அக் கடிதம் வந்தவுடன் அதை ஆராயச் சொன்னேன். இந்தக் கடிதத்திற்கு நான் பிரதேச செயலாளருக்கு பதில் அனுப்புகின்றேன். பாதை அமைப்பது என்றால் அரசாங்கத்திற்குரிய காணி அத்துமீறி எடுத்திருந்தால் அதை மீண்டும் பெற வேண்டும். மாற்றுவழியாக அதை எடுத்திருக்கின்றவர்கள் அதற்குரிய உறுதியை தர வேண்டும். அதற்கு அவர்களின் சம்மதம் வேண்டும். சம்மதம் இல்லாமல் நாம் செய்ய இயலாது. இதற்கு தீர்வு மே மாதம் வரை இருக்க இயலாது. சம்மதம் தருவது எழுத்து மூலம் தானே, இந்த மாதத்திற்குள் இதை முடிக்கச் சொல்லி எழுதுவோம்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, பாதை திறப்பு விடயத்தில் எங்களது உறுப்பினர்கள் தனிப்பட்ட ரீதியில் உள்வாங்கப்படவில்லை. குழு என்ற ரீதியில் மட்டும்தான் கவனம் எடுத்தது. இரவு பகலாக எனது வீடு மட்டுமல்லாமல் இவ்விடயம் எனது சகோதரனின் வீட்டுக்கு சென்று நான் தான் உடந்தையாக இருக்கின்றேன் என்று பாரிய குடும்பப் பிரச்சினையாக நடந்து கொண்டிருக்கின்றது. கௌரவ தவிசாளர் அவர்களே 1947 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட நிலஅளவைப் படத்தில் இப்படி ஒரு பொதுப் பாதை இல்லை. பொதுப் பாதை இருக்கின்ற இடம் எங்கே இருக்கின்றது. பொதுப் பாதை எவ்விடத்தில் இருக்கின்றது என்று அந்தப் படத்தில் முதல் உற்றுப் பார்க்க வேண்டும். அதை திறக்கலாமா? இல்லலையா? என்று நாங்கள் ஒருவருக்கு அந்த வளவை விற்பதற்கு அல்லது குடியிருப்பதற்கு முன்னால் விட்ட பாதையை மறைத்து ஒருவரின் நடுவளவால் ஒரு பாதை எடுப்பது என்பது உண்மையிலே இயலாத விடயம். கௌரவ தவிசாளர் அவர்கள் சொன்னது போல கிளை வாய்க்கால் அருகில் Reservation பூமியை எடுத்து அந்தப் பாதையை அதனால் கொண்டு போனால் என்ன?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
பாதை திறக்க வேண்டும் என்பதில் ஒருவரின் ஆட்சேபனையும் இல்லை. கட்டாயம் பாதை திறக்கத்தான் வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கச்சேரியில் இருந்து Land Commissioner வந்து பார்வையிட்டார். கட்டடங்கள் கட்டப்படுகின்றது. அவர்கள் சொன்ன வாய்க்கால் ஓரத்தில் பாதை வருவது என்றால் இருக்கின்றவர்கள் 10 அடி விட்டிருக்கின்றார்கள். நாங்கள் பின்னுக்கும் எப்படி 10 அடி விடுவது என்று கேட்கின்றார்கள்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
பின்னால் இருப்பது அவர்களது காணி இல்லையே. அவர்கள் கட்டடம் கட்டி இருந்தால் சபை அனுமதி கொடுக்காவிட்டால் அது சட்டவிரோதமான கட்டடம். இதே பிரச்சினைதான் தைக்காப்பள்ளி தெற்கு வீதியிலும். நம்மிடம் இருக்கின்ற ஆதாரம் 1969 ஆம் ஆண்டு Town Assesment Plan அந்தப் படத்தின் படி அவ்விடத்தில் ஒரு பாதை இருக்கின்றது. அந்தப் பாதையில் இருக்கின்ற எல்லா வளவுகளுக்கும் வடக்கு எல்லை பாதையாக காட்டப்பட்டிருக்கின்றது. சர்ச்சைக்குரிய வளவுக்கு மட்டும் மையவாடி எல்லையாக காட்டப்பட்டிருக்கின்றது. இதை License Surveyor க்கு கொடுத்து அந்தப் பாதையை Trace பண்ணச் சொன்னவுடன் அந்தப் பாதை 03 அடி மையவாடிப் பக்கமும் 07 அடி மற்ற பக்கமும் செல்கின்றது. இதை பள்ளிவாசல் நிர்வாகத்தோடு பேசி ஒரு உடன்பாட்டுக்கு வந்து நம்பிக்கையாளர் சபையிடமும் கதைத்து முதன் முதலாக என்ன செய்வது என்றால் மதிலை உடைத்து 03 அடியை திறப்பது, அடுத்தது இவர்கள் ஒத்து வராவிட்டால் இந்த வீடு அனுமதி எடுப்பதற்கு ஒரு உறுதி வைக்கப்பட்டுள்ளது.

அந்த உறுதியில் ஒரு TP இலக்கம் இருக்கின்றது. அந்தப் படத்தை இந்த சபை எடுத்தால் காணி சொந்தக் காரர்களுக்கு பாரிய ஒரு பிரச்சினை வரும். அதை நான் அவர்களிடம் சொல்லிவிட்டேன். ஒரு சட்டத்தரணி நேற்று சென்ற உத்தியோகத்தர்களுக்கும் காரசாரமாக கதைத்து இருக்கின்றார். அந்த உறுதிக்குரிய காணி TP இல் இல்லை. அதற்கு original உறுதியும் இருக்கின்றது. அதிலும் TP இலக்கம் இருக்கின்றது. 1969 ஆம் ஆண்டு படத்தில் இருக்கின்றது என்றால் அதற்கு பின்னர் வருகின்ற உறுதியில் எல்லையாக இருக்க வேண்டும். நாங்கள் சட்டபூர்வமாக செய்வோம். நான் இன்றைக்கு அவர்களுக்கு கடிதம் அனுப்பி இருக்கின்றேன். 25ம் திகதி சபைக்கு வராவிட்டால் அதற்குரிய நடவடிக்கை எடுப்போம் என்று, தேவை ஏற்பட்டால் நாளைக்காவது விண்ணப்பத்தை எடுத்து பூரணப்படுத்தி கொழும்புக்கு சென்று அந்தப் படத்தை எடுத்து வருவேன்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எல்லை வீதி பிரச்சினை சம்மந்தமாக இன்றைக்கு உங்களுக்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டிருக்கின்றது. முஸ்தகீன் பள்ளிவாசலில் இருந்து கோரக்கோயில் வருகின்ற வழியில் இடது பக்கமாக இருக்கின்ற வீதி இருள் மயமாக இருக்கின்றது. Photo களை Print பண்ணி தெருவில் இருக்கின்றவர்கள் கையொப்பம் வைத்து அனுப்பப்பட்டது. அதன் நிலமை மோசமாக இருக்கின்றது. மழை காலங்களில் பாவிக்கவே இயலாது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அந்தப் பாதையில் பெரிய மரம் ஒன்று இருந்தது. அதை வெட்டுவதா இல்லையா என்று அதற்கு பின்னர் முழுதாக கொங்கிறீட் போடப்பட்டிருக்கின்றது. அதில் ஒரு பிரச்சினை மேல் இருந்து ஒரு பாதை வருகின்றது. நான் சென்று பார்க்க வேண்டும். அவ்விடத்தில் சந்தி ஒன்று வருகின்றது அதில் ஒரு தாக்கம் வரலாம்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மழை காலத்தில் தற்காலிகமாக மண்ணாவது போட்டுக் கொடுக்க வேண்டும். அங்கு புதிதாக 02 மின்விளக்குகள் போடப்பட்டது. வேளாண்மை அறுவடை செய்த பின்னர் யானைப் பிரச்சினையை எதிர்நோக்குகின்ற முதல் பிரதேசம். தெருவிளக்கு ஆகக் குறைந்தது 2வது போட்டுக் கொடுக்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதற்குரிய நடவடிக்கையை எடுக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் அவர்களே, நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற அசாதாரண சூழ்நிலையை காரணமாக ஒவ்வொரு வீட்டை பொருத்தவரையிலும் முஸ்லிம்களுக்கு ரமழான் மாதம் நோன்பிற்குரிய அமல்களை செய்வதற்குரிய காலமாக இருந்தும் கூட அந்த நேரத்தில் அமல்கள் செய்ய

இயலாமலுக்கு பொருட்கள் வாங்குவதற்காக வர்த்தக நிலையங்களுக்கு முன்னாலும், பெற்றோல் நிலையத்திற்கு முன்னாலும் வரிசையாக நிற்பது பெரும் அவல நிலையாக இருக்கின்றது. இந்த காலகட்டத்தில் சபையில் முன்வைக்க வேண்டிய விடயம் எல்லோரினுடைய வீடுகளிலும் தற்போது எரிவாயு இயங்குகின்றவாறு வீடுகளை கட்டிக் கொண்டார்கள். தற்போது விறகு அடுப்பும் பாவணையில் இல்லை. மண்ணெண்னை வாங்கி பாவிப்பதற்கு மண்ணெண்னையும் இல்லாமல் இருக்கின்றது. ரமழான் மாதத்திலாவது எங்களது சபையின் மூலம் எரிவாயுவைப் பெற்று மக்களுக்கு உரிய முறையில் கொடுக்கலாமா என்று எனது தாழ்மையான கருத்தை இவ்விடத்தில் வைக்கின்றேன்.

பொது மைதானத்தில் எரிவாயு விநியோகிப்பில் வர்த்தக சங்கங்கள் என்ற ரீதியில் வர்த்தக சங்கங்கள் எரிவாயுவை பெற்று அவர்கள் இருமடங்கு விலை வைத்து விற்கின்றார்கள். இதனால் எங்களைப் போல அன்றாட கூலித் தொழில் செய்கின்ற மக்களின் நிலமை மிகவும் அவலமாக உள்ளது. அதே போன்று ஒவ்வொரு பொருட்களையும் வர்த்தக சங்கங்கள் என்று சொல்லி அப் பொருட்களை கொள்வனவு செய்து நுகர்வோருக்கு சென்றடைகின்ற நிலையில் இருமடங்கு, மும்மடங்கு விலையில் பொருட்களை வாங்க வேண்டிய அவல நிலைக்கு ஒவ்வொரு குடும்பமும் ஆளாகி இருக்கின்றது.

நான் உங்களிடம் ஒரு அனுமதி கேட்டேன். என்னுடைய பேச்சை பதிவு செய்வதற்கு ஒரு ஊடகவியலாளர் வருவதாகவும், அதற்கு அனுமதி தர வேண்டும் என்றும் கேட்டேன். ஆனால் சபையில் இருக்கின்ற கௌரவ உறுப்பினர்கள் எல்லோரிடமும் அனுமதியை பெற்றால்தான் அதற்குரிய அனுமதியை தருவேன் என்று கூறினீர்கள், இந்த இடத்தில் அவ் அனுமதியை கேட்டு உறுப்பினர்களுக்கு எத்தி வைத்தீர்கள் என்றால் இன்ஷா அல்லாஹ் அடுத்த மாதமாவது என்னுடைய உரையை பதிவு செய்வதற்கு இலகுவாக இருக்கும். நான் அவரிடம் எமது சபையிலும் ஒரு Reporter இருக்கின்றார் அவர் பதிவு செய்து தருவார் என்று கூறினேன். அதற்கு அவர் Video இன் அளவு எங்களுக்கு ஏற்ற மாதிரித்தான் இருக்க வேண்டும். உங்களது சபையில் இருப்பவர் எப்படி எடுப்பார் என்று தெரியாது என்று கூறினார். இவ்விடயத்தையும் இவ்விடத்தில் எத்தி வைக்கின்றேன். அடுத்தது சபையில் இருக்கின்ற செயலாளருக்கும், எரிபொருளை பெற்றுத்தருவதற்காக பாடுபட்ட கௌரவ உறுப்பினர்களுக்கும் இந்த சபை சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, இன்று எமது நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற அசாதாரண சூழ்நிலை காரணமாக நாடு சகல துறைகளிலும் முற்றுமுழுதாக ஒரு பாதாளத்தில் தள்ளப்பட்ட நிலையில் இருக்கின்றது. குறிப்பாக நாட்டில் உள்ள 75% இற்கு மேற்பட்ட மக்களின் வாழ்வாதாரம், அன்றாட தேவைகள் என்பன மிகவும் மோசமான ஒரு நிலைப்பாட்டில் இருக்கின்றது. அந்த வகையிலே இந்த நிலமை நாட்டில் நீடித்துக் கொண்டு செல்லுமாக இருந்தால் எதிர்வருகின்ற காலத்தில் பல இன்னல்களை எமது மக்கள் எதிர்நோக்க வேண்டிய தேவைப்பாடு இருக்கின்றது. அந்தவகையில் எதிர்காலத்தில் உள்ள பொருளாதார நெருக்கடியினை குறிப்பாக நாம் இந்த இடத்திலே பேச வேண்டுமாக இருந்தால் எமது சபையின் ஊடாக சபை செய்ய வேண்டிய தேவைகள் மக்களினுடைய அத்தியாவசிய தேவைகள். செலவீனங்களை பொருத்தவரையில் பொருளாதார நெருக்கடியாக இருக்கின்ற காலகட்டத்தில் அத்தியாவசிய தேவைகளுக்காக மாத்திரம் சபையினுடைய நிதியினை பயன்படுத்தினால் நல்ல விடயம் என்ற கருத்தை முன்வைக்கின்றேன். இன்று எமது சபையில் உள்ள மிகப் பெரிய பிரச்சினை தற்காலிக ஊழியர்களுக்கு கொடுப்பனவு வழங்குகின்ற விடயம். அது மிக பாரிய ஒரு செலவீனமாக சபையிலே இருக்கின்றது.

அதே போன்று காரியாலய தேவைகளுக்காக பெற்றுக் கொள்ளக்கூடிய உபகரணங்கள். இன்று அதனுடைய செலவீனங்கள் பல மடங்காக அதிகரித்திருக்கின்றது. எமது ஊரிலும் சில திடீர் தேவைகள், திடீர் திருத்தங்கள் ஏற்படுகின்ற போது அதனை செய்ய வேண்டிய கட்டாயமான ஒரு நிலைக்குள் ஆளாகி இருக்கின்றோம். நாட்டில் இருக்கின்ற பொருளாதார நிலையை கருத்திற் கொண்டு நாள்தோறும் ஏறக்குறைய 4, 5 மணித்தியாலயங்கள் மின்வெட்டு அமுலில் இருக்கின்றது. அந்த வகையிலே சம்மாந்துறையை பொருத்தவரைக்கும் சென்னல் கிராமம் 2ம் பிரிவில் உள்ள 40 வீட்டு பிரதேச மக்களுக்கு குடிநீர் செல்லுகின்ற பாரிய சிக்கல் இருக்கின்றது. சாதாரண காலத்திலே

அம் மக்களுக்கான குடிநீர் கிடைப்பதில்லை. தற்போது மின் வெட்டு அமுலில் இருக்கின்ற காரணத்தினால் அவர்களுக்கான குடிநீர் எந்த வகையிலும் சென்றடைவதில்லை. புனித ரமழானுடைய சஹர் நேரத்தில் கூட அவர்களுடைய தேவைகளை பூர்த்தி செய்வதற்கு குடிநீர் செல்லுகின்ற சந்தர்ப்பம் இல்லை. கடந்த காலங்களில் நாங்கள் பவுசர் மூலம் அந்த இடங்களுக்கு குடிநீர் வழங்கி இருந்தோம். ஆனால் அங்கு இருக்கின்ற சிக்கலான நிலை என்னவென்றால் குடிநீர் வருகின்ற சந்தர்ப்பத்தில் அதனை சேகரித்து வைக்கக்கூடிய வசதி எல்லோருக்கும் இல்லை. அதனை கண்டறிந்து ஒரு சிலருடைய தேவைகளை பூர்த்தி செய்திருந்தோம். ஆனால் இன்னும் சிலருக்கு அவ்வாறான அடிப்படை வசதி கொடுக்க வேண்டிய தேவைப்பாடு சபைக்கு இருக்கின்றது. எனவே அதனை சபையினூடாக கண்டறிந்து அம் மக்களுக்கு குடிநீர் வசதி சென்றடைய வேண்டும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதே போன்று இன்று விவசாயம் செய்வதற்கு நாட்டில் உரம் இல்லை. அவர்கள் விவசாயத்தை மேம்படுத்தி செய்வதற்காக தண்ணீர் இல்லை. உரிய காலகட்டத்தில் விவசாயத்தை செய்து முடிப்பதற்கான சந்தர்ப்பங்கள் மக்களுக்கு இல்லை. ஆகவே இப் பிரச்சினைகள் நீண்டு கொண்டு செல்வதை மென்மேலும் பொருளாதார நெருக்கடிக்குள் எமது சமூகம் அனைத்து மக்களும் பொருளாதார நெருக்கடியை சந்தித்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே இன்று குறிப்பாக இந்த நாட்டிலே நடந்து கொண்டிருக்கின்ற ஆட்சி அராஜகமான முறையிலே ஜனநாயகத்திற்கு வழிவிடாமல் மக்களுடைய கருத்துக்கு மதிப்பளிக்காமல் தன்னகத்தே கொண்ட ஆட்சியாக மாறிக் கொண்டிருக்கின்றது. இன்று குறிப்பாக முழு நாடும் இந்த அரசுக்கு எதிராக அரசு விலக வேண்டும் அல்லது ஆட்சி மாற்றமடைய வேண்டும் என்ற கோசத்தோடு இருக்கின்ற போது இன்று புதிதாக அமைச்சரவை நியமிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த மக்களினுடைய கருத்துக்கு மதிப்பளிக்கக்கூடிய ஒரு ஆட்சியாக இருந்தால் உண்மையாக இந்த மக்களின் இன்று இருக்கின்ற நிலமையை அறிந்து கொண்ட ஆட்சியாக இருந்தால் ஜனநாயகத்திற்கு வழிவிட்டு செல்லக்கூடிய ஆட்சியாக இந்த ஆட்சி இருக்க வேண்டும். எனவே இந்த சபை நாம் மக்கள் சமூகம் சார்பாக இன்று இருக்கின்ற சூழ்நிலையை அடிப்படையாகக் கொண்டு நாங்கள் திடகாத்திரமான தீர்மானத்தை இந்த சபை ஊடாக எடுக்க வேண்டும். இதனை ஆட்சியாளருக்கு செய்தியாக கொண்டு செல்ல வேண்டிய கட்டாய கடமையில் இருக்கின்றோம். கடந்த 2, 3 நாட்களுக்கு முன்பு சமூக வலைத்தளத்திலே பார்வையிட்டேன். எரிபொருளை பெற்றுக் கொள்வதற்காக வரிசையிலே நின்ற ஒரு அணியிலே ஒரு தாய் நான் நினைக்கின்றேன் ஒரு வயதுக்குட்பட்ட குழந்தை அக் குழந்தைக்கு மேல் அங்கி கூட இல்லாமல் மோட்டார் சைக்கிலில் வந்து வரிசையிலே காத்துக் கொண்டு எரிபொருளை பெறுவதற்காக நின்ற ஒரு அவல நிலையை பார்த்தேன். இந் நிலை இந்த நாட்டிலே மென்மேலும் நீண்டு கொண்டு செல்வதற்கு நாங்கள் எந்த வகையிலும் அனுமதிக்க முடியாது.

தெரிந்தோ தெரியாமலோ நாம் ஏற்றுக் கொண்டாலோ ஏற்றுக்கொள்ளாவிட்டாலோ இந்த ஆட்சியை ஆதரித்தாலும் ஆதரிக்காவிட்டாலும் நாட்டினுடைய ஜனநாயகம் முற்றுமுழுதாக பாதிக்கப்பட்டிருக்கின்றது. இந்த ஜனநாயகத்திற்கு இந்த ஆட்சியாளர்கள் வழிவிட வேண்டும் என்று இந்த சபையின் ஊடாக வலியுறுத்துகின்றேன். இந்த சபை இந்த சந்தர்ப்பத்திலே இந்த மக்களின் எதிர்கால நோக்கம், குறிப்பாக எதிர்கால இளைஞர் சமுதாயத்தினுடைய கல்வி நிலை பாதிக்கப்பட்டிருக்கின்றது. கல்வி நிலை எந்த நிலைப்பாட்டில் இருக்கின்றது என்பதைக்கூட தங்களால் கண்டறிய முடியாத நிலையில் இருக்கின்றது. தங்களுடைய பிள்ளைகள் கல்வி கற்க செல்லுகின்றார்கள் ஆனால் என்ன கற்கின்றார்கள் என்பது கூட கேள்விக்குரியான காலகட்டத்திலே தான் இந்த சமூகம் இருக்கின்றது. இவ்வாறு எந்தவொரு தேவையை நிவர்த்தி செய்வதாக இருந்தாலும் செய்கின்ற பாரிய சிக்கலான ஒரு நிலமை இந்த நாட்டிலே ஏற்பட்டிருக்கின்றது. இது எல்லாவற்றிற்கும் ஒரு தீர்வு காண வேண்டும் என்பதற்காக ஜனநாயகத்திற்கு வழிவிட்டு இந்த நாட்டிலே சரியான ஒரு அரசியல் ஸ்தீரத்தன்மையை ஏற்படுத்தி நாட்டு மக்கள் நிம்மதியாக வாழ வேண்டும் என்பதற்காக சபையிலே தீர்க்க தரிசனமான தீர்மானத்தை எடுக்க வேண்டும் என்று கௌரவ தவிசாளர் அவர்களிடம் வேண்டி விடைபெறுகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நீங்கள் சொன்ன கருத்தில் இந்த நாட்டில் ஒரு காலமும் ஏற்படாத ஒரு இளைஞர் எழுச்சி இன்றும் 11வது நாளாக நடந்ததன் விளைவு அமைச்சரவை எப்படி அமைந்தாலும் இந்த நாட்டின் தலைவன் ஜனாதிபதி அவர்கள் பகிரங்கமாக நான் தவறு செய்து விட்டேன் என்று உணர வைத்து அவரை சொல்ல வைத்தது பெரிய ஒரு வெற்றி மக்களுக்கு. தான் IMF இடம் நேரகாலத்துடன் சென்றிருக்க வேண்டும். இரசாயனப் பசளையை தடை செய்தது தான் தவறு செய்து விட்டேன் என்று சொல்வது பாரிய ஒரு வெற்றி. மக்களினால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மக்களோடு இந்த அவல நிலை நாம் இந்த நாட்டைப் பற்றி அக்கரை கொண்டு நமக்கு இயலுமான முறையில் பங்களிப்பு செய்து இந்த நாட்டில் எரிபொருள் எரிவாயு தட்டுப்பாடுகள் நீங்கி கற்கும் மாணவர்களுக்கு தடையாக இருக்கும் மின்வெட்டுகளை குறைத்து இந்த அரசு குறுகிய காலத்துக்குள் வேலைத்திட்டங்களை செயற்படுத்தி இன்னல்களில் இருந்து மக்களை விடுவிக்க வேண்டும் என்றும் இந்த சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது என்று ஒரு தீர்மானம் எடுப்போம்.

**தீர்மானம் - 04/50/06**
இந்த நாட்டில் எரிபொருள், எரிவாயு தட்டுப்பாடுகள் நீங்கி கல்வி கற்கும் மாணவர்களுக்கு தடையாக இருக்கும் மின்வெட்டுகளை குறைத்து இந்த அரசு குறுகிய காலத்துக்குள் இத்திட்டங்களை செயற்படுத்தி இவ் இன்னல்களில் இருந்து மக்களை விடுவிக்க வேண்டும் என்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/50/07**
சென்ற மாதம் 2022.03.01 தொடக்கம் 2022.03.31 வரையிலான செலவீனங்களும் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அனுமதி வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, ராஜபக்ஷ குடும்பத்தில் இருக்கின்ற அனேகமானவர்கள் வீட்டை விட்டு தப்பி ஓடிவிட்டார்கள். JVP இன் ஆர்ப்பாட்டம் காலிமுகத்திடலில் நெருங்கிக் கொண்டிருக்கின்றது. தன்னுடைய கதிரையிலே தான் முன் வைத்த காலை பின் வைக்கமாட்டேன் என்று சொன்ன அதி உத்தம கௌரவ ஜனாதிபதி அவர்கள் பகிரங்கமாக மன்னிப்பு கேட்டிருக்கின்றார். பயளைப் பிரச்சினையில் நான் விட்ட தவறு என்று சொல்லி, IMF இற்கு போகமாட்டோம் என்று அடம்பிடித்தவர்கள் IMF இன் காலடியில் மண்டிக் கொண்டு பிச்சை கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இதுதான் மக்களின் சக்தி.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
மக்களின் சக்தி நமக்கு எதிராகவும் மாறலாம். பசளையின் முடிவு பிழை என்றதை இந்த நாடு முழுவதும் சொன்னது. ஆனால் அவரின் ஆலோசகர்கள் சொன்ன ஆலோசனையின் படி விடாப்பிடியாக இருந்தார். அதுதான் இதன் ஆரம்பம் என்றது அவருக்கு தற்போது விளங்குகின்றது. விவசாயிகளில் இருந்து ஆரம்பித்தது இளைஞர்களுடன் முடிந்து இருக்கின்றது. அது மட்டுமல்லாமல் புதிய அமைசரவையை பார்த்தால் ஒரு வகைக்கு நமது முன்னாள் ஜனாதிபதியின் நெருங்கிய

அமைச்சர்கள் ஒருவரும் இந்த அமைச்சரவையில் இல்லை. அப்படியானால் இந்த கோசங்கள் ஆர்ப்பாட்டங்கள் எங்கு போய் முடியும் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். Go Gota Home என்று சொன்னாலும் மாண்புமிகு ஜனாதிபதி அவர்கள் இன்னும் அவரின் கடமையில்தான் இருக்கின்றார். அவருக்கு பொருத்தம் இல்லாதவர்கள் வீடு சென்றிருக்கின்றார்கள் என்றும் கருத முடியும். அப்படியானால் இந்த அரசியல் பிண்ணனிகளில் இது ஒரு மக்கள் சபை மக்களின் கருத்துக்களை உள்வாங்கி பிரதிபலிக்க வேண்டிய சபை. கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்கள் கூறியவாறு மக்களின் சக்தி நாளைக்கு என்ன நடக்கும் என்று JVP அணி காலி முகத்திடலுக்கு போய் சேருமானால் அதற்கு பின்னர் என்ன நடக்கும் என்பது நமக்கு கூற முடியாத விடயம்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஸ்தபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இந்த சந்தர்ப்பத்தில் கூற வேண்டிய விடயம் என்னவென்றால் நாட்டில் இருக்கின்ற கூடுதலான சபைகள் மொட்டு கட்சியில் அமைக்கப்பட்ட கட்சிகளாகத்தான் இருக்கின்றது. சம்மாந்துறை சபையை பொருத்தவரையில் நாங்கள் சுதந்திரமான முறையில் இந்த நாட்டுக்கு செய்திகளை, கருத்துக்களை கூறக்கூடிய சபையாக இருக்கின்றோம். எனவே இந்த சபையில் நியாயமான முறையில் நாம் கருத்துக் கூறக்கூடிய தீர்மானங்கள் எடுக்கக் கூடிய சபையாக இருக்கின்றது. அந்த கௌரவம் உங்களுக்கு இருக்கின்றது.

**கௌரவ உறுப்பினர் ஏ.யூசுப் லெப்பை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இன்று நாட்டில் நாங்கள் அனுபவித்துக் கொண்டிருக்கின்ற இந்த சூழ்நிலையை எல்லோரும் சந்தோசமாக அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். ஏனென்றால் எங்களுக்கு அப்பாற்பட்ட சில செயற்பாடுகளை நாங்கள் செயற்பட்டு அதிக அனுபவங்களை பெற்றும் இருக்கின்றோம். இன்று நாடு அடுத்த கட்டத்தில் நாட்டு மக்கள் இன்னல்களுக்கு மாட்டிக் கொள்ளக்கூடாது என்பதற்காக நல்லதொரு எதிர்காலம் இந்த நாட்டுக்கு ஏற்பட வேண்டும். நல்லதொரு நிர்வாகம் வர வேண்டும் என்ற அடிப்படையில் அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் தான் தனது பதவிக்காலம் முடிவடையும் வரை இருப்பேன் என்று கூறிக் கொண்டிருக்கின்றார்.

அதே நேரத்தில் 20வது திருத்தச் சட்டத்தை வாபஸ் பெற்று 19ஐ கொண்டுவருவதற்காக ஒத்துக் கொண்டிருக்கின்றார். அங்கு இருக்கின்ற யஹபால நல்ல ஆட்சியின் கௌரவ பிரதம மந்திரி ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க அவர்களின் தூரதிஸ்டியான அரசியல் அணுகு முறையை இதற்கு பின்னால் கூத்தாடுகின்றவர்களும் கூட 69% எடுத்தவர்களும் இன்றுதான் உணர்த்திக் கொண்டிருக்கின்றார்கள். எதிர் காலத்தில் இன்ஷா அல்லாஹ் ரணில் விக்ரமசிங்க என்ற தனியன் இந்த நாட்டின் பிரதம மந்திரியாக வர வேண்டும். அதன் மூலம் தான் நாடு நல்ல ஒரு நிலையை அடையும். அன்று இருந்த பொருளாதார நோக்கத்திற்கும் விலைகளுக்கும் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க அவர்கள் பொருளாதார ரீதியில் நிபுணத்துவம் பெற்ற ஒருவர் என்ற அடிப்படையில் மீண்டும் அந்தக் காலத்தை கொண்டு வருவதற்கு நாங்கள் எல்லோரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என நான் கூறிக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இத்துடன் சபையின் அமர்வினை இனிதே முடித்துக் கொள்கின்றேன்.

A.M.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை